மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்
கொழும்பு பல்கலைக்கழகம்

வெற்றிடங்கள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்காக தகைமைகளை பூர்த்திசெய்த தனிநபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, 2026.11.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத்திற்கு கிடைப்பதற்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிறுவனங்கள் மற்றும் பொது நிர்வாகம், மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07 என்று முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் subject பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களை மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன இணையதளத்தில் இருந்து (https://pgim.cmb.ac.lk) பெற முடியும். பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படும்.

முழுமை பெறாத அல்லது தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட நிழல் பிரதிகள் உட்பட போதிய விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை ஏற்கப்படமாட்டாது என்பதோடு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்த ஒரு சூழலிலும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

01. ஓட்டுநர் பதவி (தரம் III) – பதவி 01

தகைமைகள்

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

2. வாகன ஓட்டுநருக்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் மற்றும் ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின் ஓட்டுநராக குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.

வயது: 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மற்றவை: அனைத்து விண்ணப்பதாரரும்,

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மற்றும் வர்த்தகச் சோதனை

சம்பள அளவு: (U PL 3(III)) 2025.01.01 இன்படி ரூபா 48,005 - 16x490 - 55,845 p.m.

பணிப்பாளர்
மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்
இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,
கொழும்பு 07

2026.10.07

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED